**செய்தி வெளியீடு எண்: 062** **நாள்: 24.01.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (24.1.2018) தலைமைச் செயலகத்தில், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வேணு ஸ்ரீனிவாசன் அவர்கள் தலைமையில், அறங்காவலர்கள் டாக்டர். கே.என். சீனிவாசன், திருமதி. கவிதா ஜெகதீசன், திரு. எஸ்.டி. ரெங்காச்சாரி, சுழல்முறை அறங்காவலர் திரு. எஸ். வெங்கடேஷ் உத்தமநம்பி, அர்ச்சகர் திரு. சுந்தர் பட்டர் ஆகியோர் சந்தித்து, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு யுனெஸ்கோ ஆசியா – பசிபிக் சர்வதேச அமைப்பு 2017–ஆம் ஆண்டிற்காக வழங்கிய “Award of Merit” காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

பூலோக வைகுந்தம் என அழைக்கப்படுவதும், போக மண்டபம் என சிறப்புப் பெயர் பெற்றதும், 108 வைணவ திருத்தலங்களில் முதன்மையானதும் தொன்மையானதுமான ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், 156 ஏக்கர் பரப்பளவில், ஏழு பிரகாரங்களுடன், ஏழு பெரும் திருமதிற்சுவர்களுடன், 236 அடி உயரம், 13 நிலைகளைக் கொண்டு தெற்கு ஆசியாவிலேயே மிக உயரமான இராஜகோபுரம் ஆகியவற்றைக் கொண்டதாகும். மேலும், இத்திருக்கோயில் உலகத்திலேயே வழிபாட்டு பயன்பாட்டில் உள்ள மிகப்பெரிய திருக்கோயில்களில் ஒன்றாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 25 கோடி ரூபாய் செலவில் 11 கோபுரங்கள் மற்றும் 43 உபசன்னதிகளுக்கு முழுமையாக திருப்பணி செய்யப்பட்டு கடந்த 9.9.2015 அன்று சம்ப்ரோட்சணம் நடத்தப்பட்டது. மேலும், முக்கிய சன்னதிகளான மூலவர் பெரிய பெருமாள் சன்னதி, ஸ்ரீ தாயார் சன்னதி, ஸ்ரீ கருடாழ்வார் சன்னதி, ஸ்ரீ சக்கரத்தாழ்வார் சன்னதி, உடையவர் ஸ்ரீ ராமானுசர் சன்னதி, ஸ்ரீ பிரணவாகார விமானம், தெற்கு இராஜகோபுரம் ஆகியவற்றிற்கு 18.11.2015 அன்று மகா சம்ப்ரோட்சணம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இத்திருக்கோயில் வளாகத்தினுள் உள்ள உபசன்னதிகளிலும், மண்டபங்களிலும், பிரகாரங்களிலும் பிற்காலத்தில் தூண்களுக்கு இடையே கட்டப்பட்டிருந்த மண் சுவர்கள் அகற்றப்பட்டு தூண்கள் மற்றும் மண்டபங்களின் அழகிய தோற்றம் முழுமையாக தெரியும் வகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. திருக்கோயிலினுள் அனைத்து மண்டபங்களும், சுவர்களும் தண்ணீர் மூலம் சுத்தம் செய்யப்பட்டு, சுண்ணாம்பு கலவை

கொண்டு பாயிண்டிங் செய்யும் பணி, கோபுரங்கள், விமானங்களின் சுதைப்பணி, சன்னதி மராமத்து பணிகள் மற்றும் மண்டபங்களின் மேற்புறம் தட்டோடுகள் பதிக்கும் பணி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. திருக்கோயில் வளாகம் முழுவதும் 1 கோடி ரூபாய் மதிப்பில் புதியதாக மின் இணைப்பு பணிகள் செய்யப்பட்டதோடு, திருக்கோயிலினுள் உள்ள புண்ணிய தீர்த்தங்களான சந்திரபுஷ்கரணி மற்றும் சூர்யபுஷ்கரணி ஆகியவை தூர்வாரப்பட்டன.

மேலும், திருக்கோயில் வளாகத்தில் உள்ள கோசாலை மற்றும் மடப்பள்ளி கழிவு நீர் முழுவதும் கொண்டு செல்லப்பட்டு, வசந்த மண்டபம் அருகே அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு நந்தவனங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டு வருகிறது. வளாகம் முழுவதும் சேகரமாகும் மழை நீர், அனைத்து புஷ்கரணியில் சேகரமாகும் வகையில் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் வளாகத்திலுள்ள ஐந்து நெற்களஞ்சியங்கள் பழைமை மாறாமல் தொல்லியல் வல்லுநர் ஆலோசனைப்படி 50 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்கண்ட திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், இத்திருக்கோயிலின் புராதனத் தோற்றம் முழுமையான அழகுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் பழைமை மாறாமல் தொன்மையுடன் திகழும் வகையில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகளை யுனெஸ்கோ ஆசியா – பசிபிக் சர்வதேச அமைப்பின் 9 வல்லுநர்கள் கொண்ட குழுவால் 9.8.2017 முதல் 11.8.2017 வரை ஆய்வு செய்யப்பட்டு, 2017–ஆம் ஆண்டிற்கான “Award of merit” விருதிற்கு ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் தேர்வு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந. நடராஜன், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திருமதி ஆர். ஜெயா, இ.ஆ.ப., ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் திரு. பொ. ஜெயராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**